Koviloor Digital Library

திருவெண்பாப்பொருள்

விளக்கம்

Acc. No.
1519 - 9

The Imperial printing
Works, Madras - 400

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஔவையார்

*திருவெண்பாப்பொருள் விளக்கம்

"உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந்தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை"

அவ்விறைவன் நிறுத்தியருளிய இந்நிலவுலகத்தில், எந்நாட்டினுஞ் சிறந்து பொன்னாட்டினும் உயர்ந்த நன்னாடிதுவென்று பன்னாவலர் புகழும் திருப்பாண்டித் தென்னாட்டு மன்னர் சிகாமணியாகிய, ஸ்ரீமத் பாஸ்கர சேதுபதி மகாராஜா அவர்கள் கனசமுகத்தில், பலகலைகளும் நிலை கண்டுணர்ந்த பண்டிதர் பலர் நிறைந்த மகாசபையில் இச் சிறியேனை ஒரு சித்தாந்த சைவப்பிரசங்கம் புரியுமாறு பணித்தருளினார்கள். மாங்குயிலின் தீங்குரல் கேட்டு மகிழ்ந்திருக்கும் திருச்செவிகள் காகங் கரையு மொலியுங் கேட்டல் போல, மெய்நிலைகண்ட மேதகு புலவர் செய்திடும் உபந்நியாஸங்கள்கேட்டு மகிழ்ந்திருக்கும் பெரியோர் உய் நெறியறியாப் பொய் செறி சிறியேன் பெய்திடும் உபந்நியாஸ முங்கேட்க விரும்புதல் எற்குமோர் நெறியேயாம். அது நிற்க; திருஞானசம்பந்தர், வாகீசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் பரமாசாரியசுவாமிகள் நால்வரும் ஏனைய உண்மை நாயன்மார்களுந் திருவாய்மலர்ந்த அருட்பாக்களெனப்படும் தேவார திருவாசக மாதிகளில் ஒரோவொன்றை யெடுத்துக்கொண்டு அதன் பொருள் சிறிது

---

* இஃது இராமநாதபுரம் திரு. பாஸ்கரசேதுபதி அவர்கள் முன்னிலையில், சாமக்குளம் வெங்கடரமணதாஸர் என்னும் திரு சுப்பிரமணிய சர்மா அவர்கள் செய்த சொற்பொழிவின் ஒரு பகுதியாகும்.

Koviloor Digital Library

விளக்குதற்கோ புழுத்த நாயினுங் கடையேனாகிய சிறியேன் அத்தன்மை யாற்றல் பெற்றிலேன். ஆதலின் பூலோக சரசுவதி யென்று மேலோரால் புகழப்பெற்றுச் சிவாநுபவ முற்றிருந்த ஔவையார் அருளிச்செய்த பல நூல்களுள் ஒரு நூலிலுள்ள ஒரு வெண்பாவை யெடுத்து அதன் பொருளைச் சிற்றறிவுக் கெட்டியவாறு சிறிது விளக்கத் துணிவுற்றேன். அது வருமாறு:—

வெண்பா.

சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்
கபாய மொருநாளு மில்லை—யுபாய
மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

இத் திருவெண்பாவின் முதற்கண் ஸ்ரீ பஞ்சாக்கரத்தைக் குறிப்பிட்டருளினார் ஔவையார். அது, தூலபஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம் என முத்திறப்படும். அவை பீஜங்களது சேர்க்கைகளால் ஓரெழுத்து முதல் பதினாறெழுத்துக்கள் வரையில் தொகையேறியுங் குறைந்தும் பல திறத்தனவாக விளங்கும்.

"அஞ்செழுத்து மெட்டெழுத்தும் ஆறெழுத்து நாலெழுத்தும்
பிஞ்செழுத்து மேலைப் பெருவெழுத்தும்"

என்றபடி பல திறப்பட்டு விளங்குமவை யெல்லாம் பொதுவில் ஸ்ரீ பஞ்சாக்கரமென்றே அழைக்கப்படும். மற்றிதன் றிறமெல்லாம் "எண்ணிலி யூழி தவஞ்செய்திங் கீசனை—யுன்னினைவுபெற்ற துணர்வு"—என்றபடி எண்ணிறந்த பிறவிதோறும் சோபான முறையாய் அடிபட்டு வந்த புண்ணிய விசேடத்தால் ஒரு ஜன்மத்தில் இருவினையொத்து மலபரிபாக மெய்திச் சத்திபதிவுற்றுப் பிறவியை யஞ்சி வீடுபேறு காதலித்துச் சித்தாந்த சைவநெறி கடைப்பிடித்துச்

Koviloor Digital Library

சற்குரு சந்நிதி யடைந்து சமயவிசேட நிருவாணமென்னும் சம்ஸ்காரங்கள்பெற்று அருள்வழி நிற்கும் பெருந்தகை வாய்ந்த சற்சிடர்கட்கு அதிகாரானுகுணமாக அவ்வாசிரிய ரால் அறிவுறுக்கப்பட வேண்டியதொரு பரமரகசிய மெய்ந் நெறி யாதலின், அதனைத் தெளிந்த பெரியோர் வெளிப்பட விள்ளார். விள்ளுத லிழுக்காம். விள்ளினும் பக்குவரல்லா தார்க்கு அது விளங்கிப் பயன்றருமாறுமில்லை. இச் சித் தாந்த சைவப்பேற்றி னருமையைப்

"புறச்சமய நெறி நின்று மகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
. . . .
. . . . சென்றாற்சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

எனவரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தாற் காண்க.

இங்ஙனம் ஸ்ரீ பஞ்சாக்கரத்தைக் குறித்தெடுத்துக்-கொண்ட ஔவையார் "சிவாய நம வென்று" என்றார். "என்று" என நிற்கும் இவ்வெச்சம் என்று கனித்து, என்று செபித்து, என்று உச்சரித்து என்னும் பொருளைப் பயக்கும். இது வாக்குகளின் றொழில். வாக்குகளாவன:— வைகரி; மத்திமை; பைசந்தி; சூக்குமை யென நாற்றிறப் படுவதாம். இவை முறையே தாலுமூலம், கண்டம், இதயம், நாபி என்னும் தானங்களைக் கொண்டு விளங்கும். இவை சுத்த மாயையின் காரியம். இவற்றி னியல்பெல்லாம் மெய் கண்டசாத்திரங்களுள் விசாரித்துத் தெளிக. ஈண்டு விரிக் கிற் பெருகும்.

மேல், சிவாயநம வென்று "சிந்தித்து" என்றார். சிந் தித்தல் மனத்தின் றொழில், (மனத்துக்கும் சித்தத்திற்கும் வேறுபாடு சிறிதாதல்பற்றி அவையிரண்டையு மொன்றாகக்

Koviloor Digital Library

கொண்டு அட்சரமாம் மூன்றே யெனக் கூறும் சில தத்துவ நூல்கள்.) ஈண்டுச் சிந்தித்தலாவது அங்ஙனங் கணிக்கப்படும் ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் பொருளைச் சிந்தித்து என்பதாம். பொருளாவது, பதி பசு பாசமென்னும் முப்பொருளும் அதனு ளடங்கி நிற்கும் நிலையைச் சிந்தித்து, அதாவது, சிவம், சத்தி, ஆன்மா, திரோதம், மலம் என்னும் ஐம்பொருளும் முறையே திருவெழுத்தைந்தில் விளங்கி நிற்கும் அந்நிலையைச் சிந்தித்து, "தோற்றந் துடியதனில்" எனவும், "சேர்க்குந் துடி சிகரம்" எனவும் வரும் பிரமாணங்களின்படி இறைவனது திருவுருவமும், சிருட்டி முதலிய ஐந்தொழிலும், அயன் முதலிய ஐங்கர்த்தாக்களும், ஈசான முதலிய ஐம்மனுக்களும், ஈசானிமுதலிய ஐஞ்சத்திகளும், அவ்வைந்தெழுத்தாலமைந்த அந்நிலையைச் சிந்தித்து என்க. விரிக்கிற் பெருகும்.

மேல் "இருப்பார்க்கு" என்றார். ஈண்டிருத்தலாவது அங்ஙனம் சிந்தித்துத் தெளிந்த அந்நிலையைச் சாதித்து நிற்றலாம். அருள்வழி நிற்றல், இறைபணி நிற்றல், தானற நிற்றல், சிவமாய் நிற்றல், ஞேயத்தழுந்தல் என்பனவாதி பல வாசகங்களால் இறைவனூல்களில் உணர்த்தப்படும் மெய்ஞ்ஞான நிஷ்டையாகிய சமாதிநிலை இதுவே யெனக் காட்டுவார் "இருத்தல்" என்னு மொரு சொல்லாற் கூறினார். உச்சிப் பொழுதி னேர்பட்ட படிகம் பிறிதொன்றைக் கவராது அக்கதிரொளியே கவர்ந்து அதுவாய் விளங்கு மதுபோல், கண், படிகம், ஆகாசம்போலச் சார்ந்த தன் வண்ணமாம் உயிர். இவ்வைந்தெழுத்தைச் சாதித்து நிற்கு நிலையில் சிவமுமருளு மோர்பாலும், மலமுந் திரோதமு மோர்பாலும் முன் பின்னாகச் சூழ்ந்து நிற்க நடுநின்ற யகாரமாகிய ஆன்மா ப[illegible]தைப் பற்றாது அருளைப்பற்றி அவ்வருள் தாரகமாகச் சென்று பொருளோடுகூடி அதுவாய்

Koviloor Digital Library

விளங்கி நிற்கும் அவ் வத்துவிதநிலை இதுவேயாம். "வெளியே புறப்பட்டு மெய்யருளாம்-தாயுடன் சென்று தாதையைக் கூடிப் பின் றாயை மறந்-தேயுமதே நிஷ்டை யென்றுரனெறிநிற் கச்சியே கம்பனே." எனப் பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்ததூங் காண்க. அத்துவிதமென்ப தனுள் அகரம் இன்மை அன்மை மறுதலை யென்னும் முப்பொருள் பயக்குமன்றே! அவற்றுளொன்றுப் பெயர் மேல்வந்த நகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த் திப் பொதுவில் நிற்பதன்றி எனைப் பெயர்மேல் வந்த நகரம் போல இன்மை மறுதலைப் பொருள்க ளுணர்த்தல் வழக் கின்க ளின்மையான் "அப்பிராமணன்" என்பதுபோல் அன்மைப் பொருளே யாண்டுப் பொருந்தற்பாலதாம். அங்ஙனமாக இன்மைப் பொருளே யவ்வகரத்திற்கு வட மொழியியலால் நாட்டப்படுவ தென்றும், அன்மைப் பொருள்கோடல் நவீனர் சிலரது போலிவழக்கென்றும் இக்கால வடமொழிப்புலவர் சிலர் மயங்கிக் கூறுவர். அவர் மெய்கண்டான் நெறியை விரோதித்துப் பொய்கொண்டிழி யும் மாயாவாதப் புறச்சமயி யாகலின் அன்னோர் பொருள் எம்பால் மெய்யாதலின்றித் தூரம்போய்த் துச்சமாய் விடு மென்க. இது பற்றியன்றே "பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித, மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ?" என்றார் தாயுமானப் பெரியாரும்! "வேதாதிகாரம் பிராமணருக்கே "யன்றி" சத்திரிய வைசிய ருக்குமுண்டு." "வேதாதிகாரம் சூத்திரருக் "கின்றி" உயர்ந்த மூன்று வருணத்தார்க்குண்டு." இந்த இரண்டு வாக்கியங்களின் மத்தியில் நிற்கும் அன்றி, இன்றி என்னும் பதங்களின் அர்த்தவேற்றுமை போலவே அத்துவைதச் சொல்லின் அகரத்திற்கு அன்மைப் பொருள் இன்மைப் பொருள் வேறுபாடுண்மை யறிக.

Koviloor Digital Library

"இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே."

என்று வாதவூர்ப்பரமாசாரியர் அருளிய அம்மெய்ந்நிலையே சித்தாந்த சைவத்தாற் பெறப்படும் புனிதாத்துவித நிலை யென்றுணர்க. தானற நிற்கு மத்துவித நிலையிஃதென நன்கு விளக்குதற்கன்றே சிவஞானபோதச் சிற்றுரையின்

"நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத
லூனெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன்
றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானு மிறை"

என்னும் வெண்பாப் பொருளில் நாடுமுள முள்வழித்தா னிலனாதலும் அஃதில்வழித் தானுளனாதலும் யாங்ஙனம் பெறுதுமெனிற் காட்டுதும்:—தூல வொளியாகிய கண்ணொளியும் சூக்குமவொளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்துநிற்கு நிலையை உற்றுநோக்க வல்லார்க்குப் பிரித்தறியவாராமையின், விளக்கொளியாய்க் காணுங்காற் காட்டுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலான் அவ்வழிக் கண்ணொளியிருந்து மில்லைத்தானே; அன்றிக் கண்ணொளியாய்க் காணுங்காற் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலால் அவ்வழி விளக்கொளியிருந்து மில்லைத் தானே; இனி இது கண்ணொளி இது விளக்கொளியெனப் பகுத்துக் காணப்புகினும் காணுந்தன்மையே முற்படத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளி திரிவுபுலனாய்க் காட்

Koviloor Digital Library

சிப் படுவதல்லது தெளிவு புலனாய்க் காட்சிப்படுமா றில்லை. இனி யாது திரிவுக்காட்சி? யாது தெளிவுக்காட்சி? யெனிற் கூறுதும். அங்ஙனம் கலந்து நிற்புழியும் இது விளக்கொளி, இது கதிரொளி, இது மதியினொளியென அவ்வப்பெற்றிய வேயாய்க் காணுங்காட்சி தெளிவுக்காட்சி யெனவும் அங்ஙன மன்றி அவற்றினோடொப்பக் கண்ணொளியை வேறு காண் டல் திரிவுக்காட்சி யெனவும் கண்கூடாக அறியக் கிடத்த லின் பொருளினும் இவ்வாறாய்த்துணர்ந்து கொள்க. அற் றேல், கதிர்முன் விளக்குப்போல விளக்கொளிமுன் கண் ணொளி சத்தி மடங்கிப்போதலின் அஃதவைபோலக் காட் சிப் புலனாகாதாயிற் றென்னோமோவெனின்; என்னும்: என்னை? கண்ணொளி சத்திமடங்கிற்றாயின் விளக்கொளி காட்சிப்புலனாதல் பிறிதோராற்றாற் பெறப்படாமையின்; அற்றேல், மின்மினித் துணையேனும் தானென விளங்கு மியல்பில்லாத கண்ணுக் கொளிக்குண முண்டென்பதற்குப் பிரமாணமென்னையோ வெனின்,—அறியாது கடாயினாய். ஆகாயத்தின் கண்ணதாகிய சத்தகுணம் வியஞ்சகத்தானன் றித் தினைத்துணையும் தானே விளங்குமா றின்மையின் அது பற்றி எதிரொலிவடிவாகிய அவ்வோசையை காயத்தின் குணமன்று வியஞ்சகப்பொருளின் குணமேயென்பார் யாரு மில்லை. அதுபோலக் கண்ணொளியும் தன்னை விளக்கும் வியஞ்சக முள்வழி விளங்கி அல்லுழி விளங்காமை மாத்தி ரையே பிறிதில்லை யென்றுணர்க," என்றிங்ஙன மருளிச் செய்தார் திராவிடமகாபாஷியகர்த்தாவாகிய துறைச் சிவ ஞானயோகிகள். இவ்வுண்மை ஒரு சிறிதும் உணரப்பெறாது ஊகமில்லாப் பசுஞானிகள் சிலர் பிரம்மவித்தியாப் பத்தி ரிகை முதலியவற்றில் கதிரொளி யொன்றுதானே கட் பொறியிற்றாக்கி எதிரோடிப் பல்பொருள்களைக் காண்பதன் றிக் கண்ணுக் கெனவோ ரொளியில்லை யென்று வம்பளப்பா

Koviloor Digital Library

ராயினர். கண், ஒளியோடு சார்ந்து ஒளியாய்க் காண்டலும் இருளோடு சார்ந்து இருளாய் நிற்றலும் நாம் கண்ட அநுபவமாம். அஃது அவ்விரண்டுமாகாத வேறியல்பிற்றாகலான். வியஞ்சகத்தால் விளங்கிக் காணும் அக்கண்ணினது சத்தியையோ யாமிங்குக் கண்ணொளி யென்கின்றோம். காண்பது கதிரொளியேயன்றிக் கண்ணொளியல்லவெனின், நள்ளிருள் செறிந்த நடுச்சாமத்தில் நெடுந்தூரத்துள்ளவோர் மலையின் மிசைத் தெரியும் விளக்குக் கண்ணிற்குத் தோன்றுதலும் அவ்விளக்குக்கும் கண்ணிற்கு மிடையிலுள்ள பொருள்களி லொன்றுந் தோன்றாது அந்தகாரமே தோன்றுதலும் என்னையோவென்று கடாவி மறுக்க. விரிக்கிற் பெருகும். இஃது இங்ஙனம் நிற்க.

இங்ஙனம் கூறியவிதனாற் கன்மவேள்வி, தவவேள்வி, ஜபவேள்வி, தியானவேள்வி, ஞானவேள்வியெனத் திவ்யாகமங்கள் கூறும் ஐவகை வேள்விகளுள், முன்னைய இரண்டும் சித்தாந்தசைவர்க்கே யன்றி ஏனைப் புறச்சமயத்தார்க்கு முரியனவாய்ப் பொதுவில் நிற்பதொன்றாகலானும் அவற்றாலெய்தும் பயனும் "பசித்துண்டு பின்னும் பசிப்பானை யொக்கும் இசைத்த இருவினையி லின்பம்" என்றபடி அனித்தியமா யொழிதலன்றி பின்னவைபோல முத்திக்கு நேர்வாயிலாகாமையானும் அவ்விரண்டையும் வேறுவைத்து, மேற் சித்தாந்தசைவர்க்கேயுரிய விசிஷ்ட வேள்விகளாய் முத்தி சாதனங்களாய் நிற்கும் ஜபம், தியானம், ஞானம் என்னும் மூவகை வேள்விகளையே விதந்தெடுத்துக்கொண்டு, என்னல், சிந்தித்தல், இருத்தல் என்னும் இம்மூவகைச் சொற்களால் இங்ஙனம் நிறுத்தியருளினார் அவ்வையார்; என்க.

என்னை? கன்மவேள்வி தவவேள்விகள் சித்தாந்த சைவரல்லாதார்க்கும் பொதுவகையாய்ச் சேறல்பற்றி வேறு

Koviloor Digital Library

வைத்தென்னியவெனின், ஜபவேள்வியு மவ்வாறே சைவரை யொழித் தொழிந்த சமயிகட்கும் பொதுவகையாற் சேற லுண்மையின் இத்தனையு மவ்வாறே வேறுவைத்தென்னுதல் கூடும்; அற்றன்றிச் சித்தாந்த சைவர்க்கே யுரித்தாமென்றல் கூடாதாவெனின், அங்ஙனம் வரும் ஆசங்கை யொழித்து அஃதன்னோர்க்கே யுரித்தாமாறு காட்டுதற்கன்றே மந்திரங் கணித்து எனப் பொதுவகையாற் கூறாது ஸ்ரீ பஞ்சாக் கரத்தையே நிளர்ந்தெடுத்தோதி யருளினார் அவ்வையா ரென்றவாறு. ஸ்ரீ பஞ்சாக்கரம் கணிப்பார் சைவரேயன்றிப் பிறரன்மையான். அற்றேல், ஸ்ரீ பஞ்சாக்கரஜபம் முதலியன ஆகமங்களினன்றி வேதத்துள்ளுங் கூறப்படுதலானும், வேதத்தின்வழி வேறுவேறு முடிபுகள் கொண்டொழுகும் வைதிகசமயத்தார் பலரும் அதனைக் கணித்த லுண்மையா னும், அஃது சித்தாந்தசைவர்க்கே யுரியதென்றல் பொருந் துமா றெங்ஙனெனின், அறியாது கடாயினாய்! அவ்வா சங்கை யொழித்தற்கன்றே பஞ்சாக்கரமெனப் பொதுப் படக் கூறாது முத்திபஞ்சாக்கரத்தையே ஈண்டு ஔவையார் விதந்தெடுத் தோதுவாராயிற் றென்பது.

என்னை? ஏகான்மவாத வேதாந்திகள், சிவாத்துவித சைவர், முதலினோர் ஸ்ரீ பஞ்சாக்கரங் கணித்தலுண்டெனி னும், அவ்வைதிகர் பாசஞான பசுஞானிகளாய் ஆணவமலத் தன்மை கொள்ளமாட்டாத அகப்புறச்சமயத்தாரா யிருத்த லின், அன்னோர் கொள்வது முத்திபஞ்சாக்கரமாகாமை யானும், சமய விசேட நிர்வாண மென்னும் சம்ஸ்காரங்கள் ஆகமவழிப்பெறாத அன்னோர்க்கு முத்தி பஞ்சாக்கரத் தன்மை யுணர்த்துவாரொருவரும் இன்மையானும், ஒரு போது வலிந்து மேற்கொள்ளினும் (கதிரோனெதிர்ப்பட்ட கூகையின் கண்ணுக்குப் பொருள் காட்சியாகாது அந்த காரஞ் சூழ்வதுபோல) அத்துவசுத்தி யில்லாத அன்னோர்க்கு

Koviloor Digital Library

அதன் பொருள் விளங்கிப் பயன்றருமா றின்மையானும், "பாச மூன்றையுந் தவிர்ப்பதும் மேலானதுமாகிய தீக்கை யைத் தவிர இவ்வுலகத்தில் முத்திக்கு வழியில்லை; தீக்கை யாலேதான் மோக்கம், ஆச்சிரமங்களாலும் பிற கருமங்களா லும் முத்தியில்லை. ஆத்துவசுத்தியின்றி முத்தியைப் பெற விரும்புகிறவன் கோலின்றி நடக்கத் தொடங்கிய குருடன் போல்வன்; தோணியின்றிக் கடல்கடக்க நினைத்தவனுவன்" என்று வாயுசங்கிதை சிவகீதை முதலிய உண்மை நூல்களில் அகத்தியர் உபமன்னியர் முதலிய உயர்ந்தோராற் றுணிந்து கூறப்பட்டமையின், ஈண்டுக் கூறியது பொது நீக்கிச் சித்தாந்த சைவர்க்கே சிறப்புவகையா னுரித்தாகிய முத்தி பஞ்சாக்கரமென்பது தெற்றெ றன உணர்க. அஃது அன்ன வாதல் அகத்தியர் வரத்தான் அவதரித்து இருமொழிக் கட லும் ஒருங்கு பருகித் திராவிடமாபாடியம் வகுத்த சிவ ஞானயோகிகள் சிவஞானபோதச் சிற்றுரைக்கண்,—"ஈண்டுப் பஞ்சாக்கரமென்பது முத்தி பஞ்சாக்கரத்தை. திருவைந் தெழுத்தாற் சாதிக்கப்படும் பொருளு மதுவேயாகலான் வேறு கூறவேண்டாமையின் விதிப்படி யெனமாட்டெறிந் தொழிந்தார். இவ்வாசிரியர்மாட் டெறிந்தது முணராதார் ஓதுமுறை வேறே சாதித்து நிற்குமுறை வேறேயெனச் சித் தாந்த வழக்கொடு முரணிக் கூறுவர்; ஓதுமுறையும் சாதித்து நிற்குமுறையும் தம்முளியைபில்வழி அஃததற்குச் சாதனமா மாறியாண்டையதென்க" என்று விரித்துக் கூறினமையா லும் விளங்கும். இது நிற்க. மேற்

சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகைப் படும் சிவபுண்ணியங்களுள், சரியையுங் கிரியையுமொன்றாக் கிச் சிவதன்ம மென்றும், யோகத்தைச் சிவயோகமென் றும், ஞானத்தைச் சிவஞானமென்றும் சித்தாந்த நூல்க ளிற் கூறப்படுவதுண்மையால், சிவதன்மம் ஸ்ரீ பஞ்சாக்கரங்

Koviloor Digital Library

கனித்தலினும், சிவயோகம் அதன் பொருளைச் சிந்தித்தலி னும், சிவஞானம் சிந்தித்துத் தெளிந்த அப்பொருளைச் சாதித்து நிற்றலினும், அடங்கியிருத்தல் நோக்கி, என்று, சிந்தித்து, இருப்பார்க்கு, என்னும் இம்மூவகைச் சொற்களால் அந்நால்வகைச் சிவபுண்ணியங்களையே இங்ஙனமெடுத் தோதினர் அவ்வையாரெனப் பொருள் கூறுதலுமொன்று.

அறம் என்பது பற்பலவாமாக, "ஈதலறம்" எனத் தலை மையும் பயனு நோக்கி ஈதலொன்றன்மேல் வைத்துக் கூறியதுபோல், ஈண்டுச் சிவதன்மம் பலவாக, அவற்றுள் விசிஷ்டம் நோக்கி ஸ்ரீ பஞ்சாக்கர ஜபத்தின்மேல் வைத்துக் கூறினரென்பது—"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு மலர் காய்கனிபோலன்றோ பராபரமே." என மேலோர் கூறலின், இச்சிவபுண்ணிய நான்கு மோரின மாய் ஒன்றற்கொன்று விசிட்டமாய் நின்று முற்றும் முத்திசாதனமாமாறு காட்டுவார் அங்ஙனம் முறைபடக் கூறியருளினர்; இம்மூவகைச் சிவபுண்ணியங்களும் முறையே நிகழ்ந்தன்றிச் சிவஞானம் விளங்கலும் வீடுபேறெய்தலும் கூடாமையால். அற்றேல், அறுபத்துமும்மை நாயன்மா ருள்ளிட்ட சிவபத்தர் பலருக்குச் சரியைமுதலியனவின்றி ஞானம் நிகழ்ந்தவாறென்னெனின் அன்னோர் முன்னைத் தவப்பயன் கொண் டின்னிலத் துதித்த சாமுசித்தராதலின் அஃதிங்கு கடாவன்றென்க. விரிக்கிற்பெருகும். இதுநிற்க,

ஞானமொன்றுதானே கேட்டல், சிந்தித்தல், தெளி தல், நிஷ்டைகூடலென நால்வகைப்படுமாதலின், அவற்றுட் கேட்டலை என்று என்னுமெச்சத்துட் குறிப்புப் பொருள்பட நிறுத்திவைத்து, தெளிந்தபின்னர் நிஷ்டைகூடுதற்கு இடை யிடில்லாமையால் வேறு கூறவேண்டாது நிஷ்டையுளடக்கி, என்று, சிந்தித்து, இருப்பார்க்கு என்னு முச்சொற்களால் அந்நால்வகை ஞானங்களையுமே இங்ஙனம் கூறியருளினர்

Koviloor Digital Library

அவ்வையாரெனப் பொருள் கொள்ளுதலுமொன்று. இது நிற்க. மேல்:

"அபாயமொருநாளுமில்லை" என்றார். இங்ஙனம் முத்தி பஞ்சாக்கரம் கணித்து, அதன் பொருள் சிந்தித்து, அவ்வழிச் சாதித்து நிற்கும் சித்தாந்தசைவராகிய மெய்ஞ்ஞானிகள் அபாயத்தினின்று நீங்குவாரென்றபடியாம். ஈண்டபாய மாவதி யாது? ஜனனமரணங் கட்குட்பட்டுச் சொர்க்க நரகாதிகளிற் சென்று திரிதலாகியவபாயம்; அதுதான் ஏகதேசப் படுதலும் பரதந்திரமாதலுமாகிய அபாயம். விரித்துரைக்கிற் காலத்திரயத்திற்கட்டுண்டு, கன்மத்திரயத்திற் கலக்குண்டு, தேகத்திரயத்திற் சிக்குண்டு, அவஸ்தாத்திரயத்தில் அலைப்புண்டு, ஈஷணாத்திரயத்தினிழுப்புண்டு, தாபத்திரயத்திற் றுக்குண்டு, புவனத்திரயத்திற்புக்குண்டு, சுழலு மபாயமாம். மலமாயா கன்மங்களின் காரியங்கள் எல்லாம் அபாயமேயென்பது தோன்ற "அபாயம்" என்று ஒரு சொல்லாற் கூறினார். இஃது பாசநீக்கங் கூறியவாறும். பாசநீக்கங் கூறவே சிவத்துவ விளக்கம் வேறு கூறவேண்டாதாயிற்று. என்னை? கரையாற்றடையுற்றிருந்த யாற்றுநீர் அத்தடை நீங்கியவழி முடுகிபோடிக் கடல்நீர்புக்கு அந்நீரேயாய்ப் பின் னீங்கா முறை போல், உயிர் பாசமொருவியாண்டுத் தண்ணிழலாய் நிற்கும் பதியோடிரண்டற நிற்றலன்றி வேறிடமின்மையான்.—"ஊசல்கயிறற்றாற்றாய் தரையேயாந்துணையான்" எனவரும் மெய்கண்டார் திருவாக்குமது. "அங்கியானது தானுமொன்றை யணைந்து நின்று விளங்கிடும் பங்கியாதுயிர் தானுமிப்படிப் பற்றியல்லது நின்றிடா" தென்றார் அருணந்தி சிவாசாரியார். "அணுவத்தோ டத்துவிதமானபடி மெய்ஞ் ஞானத் தாணுவோடத்துவிதம் சாருநாளெந்நாளோ." என்றார் கருத்துமது. இவ்வத்துவிதநிலை யுணரமாட்டாதார் ஒன்றென்றும் இரண்டென்றும் அன்றென்றுமாமென்றுந்

Koviloor Digital Library

தத்தமக்கு வேண்டியவாறே கூறியிடர்ப்படுப. "நன்றென்றுந் தீதென்றும் நானென்றுந் தானென்று, மன்றென்று மாமென்றுமாகாதே நின்றநிலை-தானதாந் தத்துவமாம்" என அவ்வையாரருளிய வாய்மையைத் தெரிந்தோர்பாற் றெளிந்திடுக: ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இனி, அன்னோர் அவ்வபாயத்தில் "நீங்குவ" ரென்றது "இல்லை" யென்றதென்னெனின், நீங்குதலொருதலை யென்பதும் அது விரைவிற்று மென்பதும் காட்டுவார் "இல்லை" யென்னுஞ் சொல்லாற் கூறினார். அற்றேல், அவ்வபாயமில்லை யென்று மவ்வளவே யமைவதாக "ஒருநாளு மில்லை" யென்றதென்னையோவெனின், அது, பசுபுண்ணியங்களெனப்படும் "தானம் யாகம் தீர்த்த மாச்சிரமந் தவங்கள் சாந்தி விரதம் கன்மயோகங்கள் சரித்தோர், ஈனமிலாச் சொர்க்கம் பெற்றிமைப் பளவின் மீள்வர்" என்றமையால் இந் நெறிவந்த சிவஞானிகளும் அவ்வாறு மீளுதலுண்டோ என வரும் ஆசங்கை யொழித்து, அவரவ்வாறு நிலைநிரிந்து அவ்வபாயத்தில் யாண்டும் வீழ்வாரல்ல ரென்று முறுதி காட்டுவார் "ஒருநாளு மில்லை" என விசேடித்தருளினார். "ஈசன்யோகக் கிரியாசரியையினி னின்றோர், ஊனமிலாமுத்தி பதம்பெற் றுலகமெல்லா மொடுங்கும்போ" தெனவருஞ் சித்தியாருமது. இவையே பதிபுண்ணியங்க ளென்பது. இனித் தான யாகதீர்த்தமாதிகள் சரியைகிரியா யார்க்கத்து முளவாக, அவை பசு புண்ணியமாமாறு யாண்டையதெனின், பசுபுண்ணியம் பதிபுண்ணியமென வேறுபட்டது, செய்வோரது கருத்து வகையானன்றிப் பிறிதின்மையால் அஃதாசங்கை யன்றென்க. இது நிற்க.

மேல் "உபாயமிதுவே" யென்றார், அவ்வபாயத்தினீங்கி வீடு கூடுதற்கு ஈண்டுக் கூறிப்போந்த சித்தாந்தசைவ நெறி

Koviloor Digital Library

யொன்றே நேர்வாயிலா மென்றவாறு. ஏகாரத் தேற்றத்தா லிம்மொழித் தொழிந்த நெறியெல்லா மதற்கு நேர்வாயிலாகா வென்பதூஉம் பெறப்பட்டது. இனி " உபாயம் " என்னும் சொல் எளிது எனவும் பொருள்படுத லுண்மையின், சத்தி நிபாதத் தீத்தமராயினோர்க்கு இந்நெறி யெய்தி வீடு கூடுதல் எளிதின் முற்றுறு மெனக் கூறுதலு மொன்று.

மேல் " இதுவேமதியாகு " மென்றார். ஈண்டுநின்ற "மதி" யென்னுஞ் சொல் உண்மை ஞானத்தின் மேற்று. அதுவே பரஞானமெனவும், பதிஞானமெனவும், திருவருள் ஞான மெனவும் படும். இதுவே என்பது பின்னும் வருவிக் கப்பட்டது. இது, என்னுஞ் சுட்டு மேற்கூறிப்போந்த சித்தாந்தசைவத்தின்மே னின்றது. ஏகாரம் பிறிதினியைபு நீக்கிற்று.

மேல் "அல்லாதவெல்லாம்" என்றார். இச்சித்தாந்த சைவநெறி யொழித் தொழிந்தவெல்லாம் என்றவாறு.

"விதியே மதியாய் விடும்" என்றார். ஈண்டுநின்ற "மதி" ஏனைச் சமயஞானங்களின்மேற்று. "விதி" யென்னும் சொல் பாசகாரியத்தின்மேற்று மலநடையென்னும் பொருட் டாம். உலகாயதமுதற் பாஷாணவாத சைவமீறான சமய ஞானங்களெல்லாம் பாசஞான பசுஞானங்களாவதன்றிப் பதிஞானமாகாமையானும், அந்த ஞானங்களாலடையவரும் முத்திகளென்பது அறிவைய ழின்புறுமுத்திமுதற் பாஷாண முத்திமீறான பழிசேர் முத்தியேயன்றித் திரிமலமுமகல உயிர் அருள்சேர் முத்தியாகாமையானும், அவ்வச்சமயத்தார் முடி பாகக்கொண்ட அந்நிலைகளெல்லாம் எம்மிறைவனு லதிஷ்டிக் கப்படும் சுத்தமாயா அசுத்தமாயா தத்துவங்களில் ஒவ் வொன்றேயாவதன்றித் தத்துவாதீத நிலையாகாமையானும், அவையெல்லாம் மலநடையாய்ப் பிறிதில்லையென்னு முண்மை

Koviloor Digital Library

கூறுவார் விதியேமதியாமெனப் புணர்ந்தோதினர். இனி "ஆது" மென்பதே யமைவுதாக "ஆய்விடு" மென்றதென்னை யெனின், அவை யங்ஙனம் மலநடையேயாயினும் "புறச் சமயநெறி நின்றும் அகச்சமயம்புக்குப் புகன்மிருதிவழியுழன் றும்" இங்ஙனம் பல்பிறவியினும் அவ்வச்சமயநெறி நின்று பரிபாக முதிருந்தோறும் விட்டுவிட்டுப் போய் மேலேறிச் "சென்றாற்சைவத் திறத்தடைவரிதிற் சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" ஆதலின் அவை யதற்குச் சோபான முறையாய் இறைவனால் நிறுத்தப்பட்டு நடப்பனவன்றி யாண்டு மொரு பெற்றித் தாய் நிலைபெறுதலின்மையால் ஆகுமென்றமையாது ஆய் விடுமெனக் கூறியொழிந்தார். இதனை லேனைச்சமயத்தார்க்கு மோருறுதி கூறியவாறு. "சமயகோடிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமென் றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றது—அந்தப் பெரியபொருளைப் பணிகுவாம்" என்றமையின் எல்லாச் சமயங்கட்கும் எம்மிறைவனே இறைவனென் றுணர்க. "யாதொருதெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகி யெங்கள் மாதொருபாகனார் தாம்வருவர்" என்பதூஉமது. விரிக்கிற் பெருகும்.

சொற்பொழிவு முற்றும்.

இக்காலத்து ஏகான்மவாத வேதாந்திகளும் பசுஞானப் பண்டிதருமாகிய சிலர் காமிகாதி திவ்யாகமங்களை அவைதிக மெனவும் அப்பிரமாணமெனவுந் தூஷித்து அல்லல் விளைப்பாராயினர். அவர்தங் கொள்கையை நிறுத்தற்கு வாயுசங்கிதை முதலிய நூல்களையும் சான்றாகத் தேடினர். இவர் புரியும் சிவாகம நிந்தனைக்குச் சிவாகமசித்தாந்த மணங் கமழும் திவ்யபுராணமாகிய வாயுசங்கிதையைச்

Koviloor Digital Library

சான்றுகோடிய துணிவு அம்மம்ம! சால வியக்கத்தக்கதே! அற்றேல், வாயுசங்கிதையில் காமிகாதிகளை "அசிரௌதங்கள்" என்று கூறுவதென்னையெனிற் கூறுதும். உண்ணும் பதார்த்தங்கள் பலவும் உப்பைச் சார்ந்து சுவைபெறுவனவாகப் பால்மாத்திரம் அதனுதவிவேண்டாது இயற்கையிற் சுவை மலிந்து விளங்குமதுபோலும், மந்திரங்கள்பலவும் பிரணவத்தின் சம்பந்தத்தால் வலிபெற்று விளங்குவனவாக ஸ்ரீ பஞ்சாக்கர மட்டும் அதனுதவியின்றியும் இயற்கையில் ஆற்றல்பெற்று விளங்குமதுபோலும், நூல்களெல்லாம் வேதத்தைத் தழுவியே ஆதிக்கம்பெறுவதாக, காமிகாதி சிவாகமங்கள்மட்டும் அதன் துணை வேண்டாது இயற்கையிலே சுதந்திராதிக்கம்பெற்று விளங்கும் சிறப்புடைத் தென்பதே வாயுசங்கிதையி னுட்கருத்தென்றுணர்க. வேதத்தின் உத்தரபாகம் போன்று சிவஞானம் பெருக்கி அவ்விறைவன் திருவாக்காய் நிலைபெறுவது காமிகாதிகளாகலின், இவ்வுண்மை யுணரப்பெறாத அந்தோ! பழிப்புரை பகர்ந்து பாவிகளாயினர். காமிகாதிகள் அவைதிகமும் அப்பிரமாணமுமாயின் வைதிகமாகிய வேறு ஆகமங்களைத் தேடிக் கொள்ளாது இக் காமிகாதிகளையே அகஸ்தியர், உபமன்னியர் முதலிய உயர்ந்தோர்பலரும், ஸ்ரீ நீலகண்டர், அரதத்தர், அப்பய தீக்கிதர் முதலியனருந் தேடியுய்ந்ததென்னையெனக் கடாவி அவர் வாயையடக்குக. இப் புலவரது முகாலம்பனமும் இனி நம்மவர் செய்யாதொழிக விரிக்கிற் பெருகும்.

மெய்கண்ட தேவர் விரைகழல் வாழ்க
சிவஞானசுவாமிகள் சேவடி வாழ்க

The Imperial Printing Works, Madras.—400/9-32.